அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
சார்வரி ❂ வைகாசி (மே – 2020) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் பதஞ்சலி மகரிஷி அருளிய ஆசி நூல் ........ 11
4. 16.02.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை முற்றுப்பெற்ற முனிவனே ஞானியாவான்** ........ 17
5. ஓங்காரக்குடிலின் அமுதின் பெருமை குறித்த மகான் சுப்பிரமணியர் ஆசி நூல் ........ 29
6. சித்ரா பௌர்ணமி விழா ........ 34
7. வைகாசி மாத பௌர்ணமி விழா ........ 34
8. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 35
9. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 45

சிறிதும் கருணையில்லாது உயிர்க்கொலை செய்து
உண்ணுகின்ற மக்கள் நட்பு நமக்கு தேவையில்லை!
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை,
ஓங்காரக்குடில், துறையூர்.

கூட்டியே அரங்க ஞானியை
குருவாக வணங்கி ஆசிபெற
கட்டம் தீர்க்கும் வழிபாட்டை
கலியுகத்தார் இல்லில் பூசையாக தொடர
தொடரவே மாற்றம் கிட்டும்
தூய சிந்தை தெளிவு கிட்டி
இடரை வெல்லும் பக்குவம்
இயற்கையின் பாதுகாப்பும் உண்டாகும்
ஆகவே அன்னதான சேவை
அகிலம் எல்லாம் செய்துவர
மகான் அரங்கன் நாமசெபம்
மாதவ பலனை தந்தருளும்

– மகான் பதஞ்சலி மகரிஷி ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான "**ஞானயுகம்**" அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

## சித்தர்கள் போற்றித் தொகுப்பு

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி **131**
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் **3047**

மேற்கண்ட **131** சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

## சார்வரி வருடம் வைகாசி மாத ஞானத்திருவடி நூலிற்கு

# மகான் பதஞ்சலி மகரிஷி அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. காக்கும் சக்திமிகு கந்தனே
கலியில் ஞானம் அருளி
ஆக்கமுடன் மக்களை தேற்றி
ஆபத்தில்லா வாழ்வு தரும் வேலனே

2. வேலனே ஞானத்தலைவனே
வேள்வியாக மாதவசி தன்னை
காலமதில் உன் அவதாரமாக
கலியில் நிகழ்த்தி துறையூர் மண்ணில்

3. மண்ணில் அரங்கமகா தேசிகனாக
மாற்றம் செய்ய வந்த ஐயனே
மண்ணுலகில் அரங்கன் சக்தியாக
மக்களை காக்கும் ஞானமாக வரும்

4. ஞானமாக வரும் ஞானத்திருவடி நூலுக்கு
ஞாலமதில் பதஞ்சலி யானுமே
ஞானமுடன் சார்வரி விடை திங்களுக்கான
நல் ஆசிதனை இதுகாலம் உரைப்பேன்

5. உரைக்கவே உலகமாற்றம் செய்ய
உயர்ஞானம் அருளி வருகின்ற
மறை போற்றும் ஞானியாக
மாதவசியாக வந்த அரங்கன் தரும்

6. தரும் சன்மார்க்க நெறி
தரணி காக்கும் உயர் ஞானநெறி
தருமமாக அரங்கன் தரும்
தானமான அன்னதானமாக உள்ள

7. உள்ளதொரு அறநெறியை
உயர்வாய் ஏற்று வருக
இல்லாமை ஏழ்மை என்ற நிலை
எங்கும் விலகி மாற்றம் காண்கும்

8. காண்கவே அரங்க மகானின்
கருணைமிக்க குடில் தன்னை
உண்மைபட ஞான சபையாக எண்ணி
உணர்ந்து தெளிந்து வரும் மக்கள்

9. மக்களுக்கு கலிகாலம் வழியான
மாச்சர்ய குற்றம் கட்டங்கள்
தேக்கமுறும் அணுகா விலகிடும்
தேசிகனார் தீட்சை ஏற்ற மக்களுக்கு

10. மக்களுக்கு ஆயுத கண்டம் கலகம்
மாசு கிருமி வழி பேரிடர் அல்லல்
தக்கபடி அணுகா விலகி நிற்கும்
தரணியில் ஆனாலும் நடப்பு காலம்

11. காலமதில் கலியின் கொடுமையாக
கருணை ஜீவதயவு மறந்து
ஊழல் கடமை செய்ய கடமைமீற
உத்தமமில்லா செயல்கள் மலிந்து

12. மலிந்து உயிர்க்கொலை வதை
மனதுள் வஞ்சம் சூழ்ச்சிபட
இழிவென இன மத பேதம்
எங்கும் எதிலும் கலகம் துன்பமென

13. துன்பமென தீவழி பெருகிடவே
தேசமெங்கும் தீய நச்சுக்கிருமி
துன்பமாகி பிரச்சினை வாட்டம்
தேசமெல்லாம் உயிர்ப்பலி காணும்

14. காணவே மக்கள் பீதியுற
கண்டுவரும் பேரிடர் துன்பமாக
ஞானமிலா செயல்வழி இன்னலே
நடப்பில் கட்டுப்படுத்த முடியா வண்ணம்

15. வண்ணமுடன் வல்லரசு தேசங்களும்
வதைபடும் பின்னடைவு பெறும்
இன்னலான இவை இடர் விலகி
எல்லா தேசமும் பாதுகாப்பு பெற

16. காப்புபெற கந்தபெருமான் மேலான
கடவுள் வழிபாடுதனை செய்து
ஒப்புகொண்டு தருமநெறி ஏற்று
ஓங்காரக்குடிலின் தொடர்பு கூட்டி

17. கூட்டியே அரங்க ஞானியை
குருவாக வணங்கி ஆசிபெற
கட்டம் தீர்க்கும் வழிபாட்டை
கலியுகத்தார் இல்லில் பூசையாக தொடர

18. தொடரவே மாற்றம் கிட்டும்
தூய சிந்தை தெளிவு கிட்டி
இடரை வெல்லும் பக்குவம்
இயற்கையின் பாதுகாப்பும் உண்டாகும்

19. ஆகவே அன்னதான சேவை
அகிலம் எல்லாம் செய்துவர
மகான் அரங்கன் நாமசெபம்
மாதவ பலனை தந்தருளும்

20. அருளவே ஆசான் சக்தியாக
அறமாக வரும் ஞானத்திருவடி நூலை
அருளாக பெற்று உலகோர்
அவரவர் இல்லில் வைத்து பூஜித்து

21. பூஜித்து வாசித்தும் வர
பூவுலகில் சித்தவழி அவுசத முறை
ஆசிபட ஏற்று ஊரடங்கு முறை
அவசியம் மக்கள் ஏற்று தனிமைப்படுத்தி

22. தனிமைப்படுத்தி தவமுறை தொடர
தப்பிப்பர் உலகோர் பேரிடரிலிருந்து
கனிவேலவன் தயவால் உலகோர்
கண்டம்பிணி விலகி மரணமும் வெல்வர்

23. வெல்வர் ஞானிகள் பூஜை செய்ய
வெல்வர் கலித்துன்பங்களை
ஆள்பவரும் இணங்கி வருகவே
ஆளுமை ஞான ஆட்சியாக பெறுவர் ஞானத்திருவடி நூலிற்கு ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

சார்வரி ஆண்டு வைகாசி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் பதஞ்சலி மகரிஷி அருளிய ஆசி நூலின் சாரம் :

அளவற்ற சக்திமிக்க காக்கும் தெய்வமே கந்தபெருமானே, துன்பம்மிக்க கலியுகத்திலும் ஞானமருளி ஆக்கமும் ஊக்கமும் மக்களுக்கு அருளி அவர்களை தேற்றமடையச் செய்து அவர்களுக்கு ஆபத்தில்லாத வாழ்வினை தந்தருளும் வேலவனே ஞானத்தலைவனே, இவ்வுலகின் மகாவேள்வியாக மாதவசி அரங்கனை இந்த கலிகாலத்தினிலே உமது அவதாரமாக துறையூர் மண்ணில் அரங்கமகானாக அவதரிக்க செய்து உலகினில் பெருமாற்றம்தனை உருவாக்க வந்த ஐயனே முருகப்பெருமானே, தாம் அவதாரமாக அவதரித்த அரங்கமகானின் சக்தியாக மக்களை காக்கும் ஞானமாக உலகினில் வெளிவரும் ஞானத்திருவடி நூலிற்கு பதஞ்சலி முனிவராகிய யானும் சார்வரி வருடம் வைகாசி மாதத்திற்கான நூல் ஆசிதனை உரைக்கின்றேன் என்கிறார் மகான் பதஞ்சலி முனிவர்.

இவ்வுலகினில் உலகப்பெருமாற்றம் தனை செய்திட வேண்டி, உலக மக்களுக்கு உயர் ஞானத்தை அருளி அவர்களை வழிநடத்தி வருகின்ற வேதங்கள் போற்றுகின்ற மகா ஞானியாக மகா தவசியாக வந்துதித்த அரங்கமகான் தரும் தூயநெறியான சன்மார்க்க நெறி வழியினில் தர்மங்களாக உலகோருக்கு அரங்கன் தரும் தானமான அன்னதானமாக உள்ள அறநெறியினை உலக மக்களெல்லாம் ஏற்று உயர்ஞான நெறியினில் நடந்து அன்னதானங்களை செய்து வரவர, உலகினில் இல்லாமை என்ற ஏழ்மை நிலை உலகினின்று விலகி பெரும் மாற்றங்களை காணும்.

ஆதலினால் அரங்கமகானின் கருணைமிக்க ஞானசபையாகிய ஏழாம்படைவீடு துறையூர் ஓங்காரக்குடிலினை மக்கள் ஞானசபையாக எண்ணி உண்மையாக ஏற்றுக்கொண்டு குடிலின் பெருமைதனை உணர்ந்து தெளிந்து குடில் நாடி வரும் மக்களுக்கு கலிகாலத்தின் குற்றங்களினால் உண்டாகும் கஷ்டங்கள் எல்லாம் விலகிவிடும்.

ஆறுமுக அரங்கமகானின் திருக்கரங்களிலே தீட்சை உபதேசங்களை அடைந்து தெளியும் மக்களுக்கு ஆயுதங்களினால் துன்பங்கள் ஏதும் வராது, உலக மாசுகளால் துன்பம் நேராது. நச்சுக்கிருமிகளால் உண்டான பேரிடர் அல்லல் இவர்களை அணுகாமல் விலகிவிடும்.

ஆனாலும் தற்காலத்திலே கலியுகத்தின் கொடுமையாக கருணையற்ற மனநிலை மக்களுக்கு உண்டாகி ஜீவதயவினை மக்கள் மறந்து, கடமையை

செய்யவே ஊழல் புரிந்து, கடமையை மீறி தவறான வழியில் சென்று நன்மையற்ற செய்கைகளை செய்தல் என உலகமெங்கும் குற்றங்கள் அதிகமாகி உள்ளதோடு உயிர்க்கொலை செய்து புலால் உண்ணும் மாபாதக செயலையும் மக்கள் செய்து வருகின்றார்கள். மனதினுள் வஞ்சமும் சூழ்ச்சியும் அதிகமாகி இழிவான செயல்களான மதபேதங்களை கடைப்பிடித்து, எங்கும் எதிலும் துன்பமான தீயவழிச் செயல்கள் உலகெங்கும் பெருகி உள்ளது.

ஆதலினாலே உலகமெங்கும் மக்கள் செய்திட்ட உயிர்க்கொலை பாவமும், மக்கள் செய்திட்ட தீயவழி செயல்களினால் வந்த பாவமும் அதிகமாகவே தேசமெங்கும் தீய நச்சுக்கிருமிகள் பரவி துன்பமாக மாறி மக்களுக்கு உயிர்ப்பலிகளையும் கடும் வேதனைகளையும் உண்டாக்கி உள்ளது. மக்கள் பீதி அடையும் வகையில் இந்த நச்சுக்கிருமியின் தாக்குதல் அரசினால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பெருகி மக்களை வாட்டி வதைக்கிறது. இந்த கிருமியின் தாக்குதலால் வல்லரசு நாடுகளும் துன்பப்பட்டு மரணத்தை சந்திக்கும், கிருமியுடன் போராட முடியாமல் பின்னடைவை காணும்.

இப்படிப்பட்ட இடரான சூழலில் உள்ள உலக நாடுகளெல்லாம் தங்களின் நாட்டைப் பற்றியுள்ள கிருமியின் துன்பத்திலிருந்து விடுபட்டு பாதுகாப்பை பெற உலக நாடுகளெல்லாம் தங்களின் பேதாபேதங்களை எல்லாம் மறந்து முருகப்பெருமானை வழிபாடுகள் செய்து முருகப்பெருமானை வழிபடு தெய்வமாக ஏற்றுக்கொண்டு முருகப்பெருமான் வகுத்துக் கொடுத்த தர்மநெறிகளை ஏற்று தர்மங்களை செய்து வருவதுடன் ஏழாம்படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் தொடர்பினை அதிகப்படுத்தி அரங்க ஞானியை தரிசித்து அரங்கரை குருவாக ஏற்று அரங்கரின் ஆசிகளை பெற்று வருவதுடன் மக்களின் கஷ்டங்களை தீர்க்கின்ற வல்லமைமிக்க சரவணஜோதி வழிபாடுகளை உலக மக்கள் அவரவர் வீடுகளிலே ஜோதி ஏற்றி வைத்து வழிபாடுகளை செய்து வர, உலகமெங்கும் மாற்றம் உண்டாகும். மக்களுக்கு அறிவு தெளிவு உண்டாகும், எண்ணத் தூய்மை உண்டாகும், துன்பத்தை வெல்லும் பக்குவம் உண்டாகும், இயற்கையின் பாதுகாப்பும் பெறுவர்.

ஆதலினால் உலக மக்களெல்லாம் ஆறுமுகனாரும் அரங்கரும் வள்ளல்பெருமானாரும் வலியுறுத்திக் கூறிய அன்னதானத்தினை உலகமெங்கும் செய்து வர வேண்டும். யுகமாற்ற ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகரின் நாமங்களை சொல்லி வர, அவை மந்திர உருக்களாக மாறி மாதவம் செய்த பலனை தந்தருளும்.

யுகமாற்ற ஞானி உலகப்பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிகரின் மகா சக்தியாக அறத்தின் சாட்சியாக வெளிவரும் ஞானத்திருவடி நூலை அருள் நூலாக பெற்று உலகோர் அவரவர் வீடுகளிலே வைத்து பூஜைகள் செய்து, பின் வாசித்து வந்து சித்த மரபின் வழி வருகின்ற சித்த வைத்திய மருத்துவ முறைகளை ஆசான் ஆசிபட ஏற்று, அரசு அறிவித்த தனிமைப்படுத்துதல் நோக்கமாகிய ஊரடங்கு முறைகளை மனவிருப்பத்துடன் ஏற்று தங்களை தனிமைப்படுத்திக் கொண்டு தாம் பெற்ற தனிமையை தவம் செய்ய கிடைத்த வாய்ப்பாக எண்ணி தவமுறைகளை தொடர்ந்து செய்திட உலகோர் தற்சமயம் உண்டான உலகப்பேரிடரில் இருந்து முருகப்பெருமானின் தயவால் தப்பிப்பதோடு உலகெங்கும் உண்டான துன்பங்களும் பிணிகளும் விலகி மரண கண்டத்திலிருந்து தப்பிப்பார்கள்.

**ஞானிகளை பூஜைசெய்ய சகலமும் வெல்வார்,**
**ஞானிகளை பூஜைசெய்ய கலியுகத் துன்பங்களை வெல்வார்,**
**நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் ஞானிகளை பூஜைசெய்ய**
**அவர்களது ஆட்சி ஞானஆட்சியாக மாறும்**

எனக் கூறுகிறார் மகான் பதஞ்சலி முனிவர்.

–சுபம்–

எல்லா துன்பங்களையும் வென்று
வெற்றி காண விரும்புகின்றவர்கள்
**“ஓம் சரவணஜோதியே நமோ நம”**
என்ற மந்திரத்தை
காலை மற்றும் மாலையில்
சிறிது நேரம் ஜெபித்து வரவும்.

– மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

**முருகன் திருவடி வாழ்க**

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
16.02.1988 அன்று அருளிய அருளுரை

# முற்றுப்பெற்ற முனிவனே ஞானியாவான்

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே, தொண்டர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் அடிப்படை கொள்கையே தினமும் ஞானிகளை பூஜை செய்து, அவர்களது ஆசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான். அதுவும் ஆரவாரமில்லாமல் செய்கின்ற பூஜையாக இருக்க வேண்டும். பூஜை செய்யாமல் நாட்களை வீணாக்கக் கூடாது.

**வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்கும் கல்.**

**– திருக்குறள் – அறன் வலியுறுத்தல் – குறள் எண் 38.**

இவ்வுலகினில் மனிதனாக பிறந்த அனைவரும், தனது வாழ்நாளில் ஒவ்வொரு நாளையும் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும். வீண் பொழுது போக்கக் கூடாது. நாட்களை வீணாக்காமல் நல்லபடி பயனுள்ளதாக்கிக் கொள்வதை **வாழ்நாள் வழியடைக்கும் கல்** என்கிறார் மகான் திருவள்ளுவர்.

**போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்**
**போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார்**
**நாதன் நடத்தால் நயனங் களிகூர**
**வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே.**

**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 142.**

**போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியை** – மூச்சுக்காற்றை எப்படி இழுக்க வேண்டும், கட்ட வேண்டும் என்பதை ஆசான் நந்தீசர் சொல்ல வேண்டும். மூச்சுக்காற்றை கட்டுகின்ற மார்க்கத்தை அறிந்தால் எழுப்புகின்ற மார்க்கத்தை அறியலாம்.

**கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி**
**இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி**
**மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்**
**குடையாமல் ஊழி இருக்கலு மாமே.**

**– திருமந்திரம் – தாரணை – கவி எண் 591.**

கட்டுகின்ற வாசியை வீணாத்தண்டு வழியே எழுப்புகிறான்.

**அத்தாற் பிறவி யவரிரு கண்களை**
**வைத்தார் நுனிமூக் கின்புரு வத்திடை**
**நித்தார மங்கே நினைக்கவல் லார்க்கு**
**எத்தாலுஞ் சாவிலை இறையவ னாமே.**

**– திருமூலர் ஞானக்குறி 30 – கவி எண் 5.**

சிலபேர் யோகப்பயிற்சி என்ற பெயரில் நுனிமூக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவன் அநியாயமாக கண்ணை கெடுத்துக் கொள்கிறான். நுனி மூக்கு என்பது புருவமத்தி. இப்படியெல்லாம் தெள்ளத்தெளிவாக சொல்லியிருக்கிறார். இதைத்தான் **போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியை** என்று சொல்கிறார். புண்ணிய நந்தி அதற்குரிய அறிவை தருவார். மூச்சைக் கட்டுகின்ற மார்க்கத்தையும், அவிழ்க்கின்ற மார்க்கத்தையும் அறிவதற்கு ஆசான் நந்தீசரின் அருள் வேண்டும். கட்டுகின்ற மார்க்கத்தை அறிந்தால் மட்டும் போதாது, அவிழ்க்கின்ற மார்க்கத்தையும் அறிய வேண்டும். எப்பொழுது கட்ட வேண்டும், எப்பொழுது அவிழ்க்க வேண்டுமென்பதை ஆசான் சொல்ல வேண்டும். அதுதான் சும்மா இருக்கக் கூடிய இரகசியம்.

**இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி** – இடைவாசல் என்பது கண்டஸ்தானம். வாசியை ரேசித்து கண்டஸ்தானத்தில் நிறுத்துகிறான்.

**இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்**
**துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்**
**உறக்கத்தை நீக்கி உணரவல் லார்கட்**
**கிறக்கவும் வேண்டாம் இருக்கலு மாமே.**

**– திருமந்திரம் – கேசரி யோகம் – கவி எண் 801.**

வாசியை கண்டஸ்தானத்தில் நிறுத்தி வெளிக்காற்றை உள்ளே இழுத்து புருவமத்தியில் செலுத்துவான். இந்த அறிவைப் பற்றி சொல்லும்போது, **போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியை** என்று சொல்கிறார். போதம் என்ற ஞானம் கிடைக்க வேண்டும். இந்த அறிவை ஆசான் தர வேண்டும். இதற்கு ஆசானின் தயவு வேண்டும்.

**மலைவாசல் மதியிரவி யடையும்போது**
**வன்னிஒளி தீக்காடு மதியோகோடி**
**தலைகீழாய்க் கால்மேலாய் தமரில்புக்கிச்**
**சச்சிதா னந்தவெளி சார்ந்துகண்டு**
**உலைவாயில் மெழுகதுபோ லுருகியுள்ளம்**
**ஒடுங்கிநிலை பெற்றவர்க்கு ஒளிகள்காணும்**
**துலைகாணும் திருவாடு துறையைப்பார்க்கில்**
**சூரியனும் சந்திரனும் தோற்றமாமே.**

**– மகான் அகத்தியர் அருளிய துறையறி விளக்கம் – கவி எண் 5.**

**மலைவாசல் மதியிரவி யடையும்போது** – இதற்குரிய விளக்கத்தை ஆசானை வணங்கி, அவர் அருளைப் பெற்று அறிந்து கொள்ள வேண்டும்.

**வன்னிஒளி தீக்காடு மதியோகோடி** – இடகலையையும், பிங்கலையையும் சேர்த்து புருவமத்தியில் செலுத்தி, அந்த இடத்தில் நிறுத்தி இடது கலையை இயக்கும்போது ஒரு வட்டம் தெரியும். அந்த வட்டத்தில் நூறு கோடி சந்திர ஒளி தெரியும். ஆனால் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கும்.

அதேகாற்றை வலது பக்கம் இயக்கினார் என்றால், ஒரு கோடி பிரகாசமுள்ள சூரிய ஒளி தோன்றும். அதுவும் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கும். “கண் கடுக்க புகை சிறிதும் காட்டாதே” என்பார் மகான் இராமலிங்கசுவாமிகள். அதே காற்றை சுழுமுனையில் செலுத்தி பார்த்தார்கள் என்றால், ஒரு கோடி மைலுக்கு அக்கினியாக தெரியும்.

**தலைகீழாய்க் கால்மேலாய்** வாசி வந்து போகும். யோகிகள் காற்றை நிறுத்தி புருவமத்தியில் செலுத்தி விடுவார்கள். இப்படி வந்து போகின்ற காற்று அப்படியே திரும்பி உந்திக்கமலத்திற்கு கீழே தங்கிவிடும். இந்த சிறப்பறிவைதான் **போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியை** என்று சொல்கிறார். இந்த போதம் என்கிற அறிவை, ஞானத்தை ஆசான்தான் தர வேண்டும்.

**நிலைக்கும் மூலத்தில் நிற்கின்ற வாசியைத்**
**தலைக்குள்ளாகத் தமர் கொண்டு இருத்திடில்**
**மலைக்குமோ சும்மா மனக்குரங்கு ஐயா**
**கலைக்கும் பொழுதில் கனல் பிறவாதே.**

**– நந்தீசர் நிகண்டு சூத்திரம் 30 – கவி எண் 17.**

அதுபோன்று இந்த வாசலைக் கட்டியதால்தான் **மலைவாசல் மதியிரவியை** அறிந்து கொள்கின்ற வாய்ப்பு கிடைக்கும்.

வாசி வசப்பட்ட பின், பேசாது அமைதியாக காத்திருக்க வேண்டும். இந்த அறிவை ஆசான்தான் தர வேண்டும். வசப்பட்ட வாசி கலைந்துவிட்டால்

எல்லா மகான்களும் கடையன் இவன், ஏமாந்துவிட்டான் என்று கையை விரித்து விடுவார்கள். ஆசான் தயவில்லாமல் எப்பொழுது வாசியை கலைத்தானோ, அப்பொழுதே ஆசான் இவனை கைவிட்டு விடுவார். மோன வாழ்க்கையை விட்டுவிட்டான், இவனுக்கு தகுதியில்லை என்று ஒதுங்கிக் கொள்வார்கள்.

மோனநிலை என்று சொல்லப்பட்ட இரகசியத்தை இவன் அறிவதற்கு, அந்தக் காற்று தானாகவே ஒடுங்கி பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு பிறகு மேல்நோக்கி வரும். அப்படி மேல்நோக்கி வந்து உச்சியை தாக்கி, திரவப்பொருளாக இறங்கும்.

அதன் பிறகு முன்னே அடைத்த காற்றை மறுபடியும் இரேசித்து, புருவமத்தியில் செலுத்துவான். வீணாத்தண்டில் உள்ள அடைப்பெல்லாம் நீங்கி, மறுபடியும் சுத்த அமிழ்தமாக மாறும். இது மிகவும் கடினம்.

**மடைவாயிற் கொக்குப்போல்** – கொக்கு தனக்கு தேவையான மீன் வரும்வரையில் அமைதியாக காத்துக் கொண்டிருக்கும். வாசி வசப்பட்ட பின், ஒடுங்கிய காற்று மேல்நோக்கி வரும்வரை, கொக்குப் போல் அமைதியாக காத்திருக்க வேண்டும்.

**வந்தித் திருப்பார்க்கு** – வந்தித்திருப்பார் என்றால் புகழ்தல் என்று அர்த்தம். நிந்தித்தல் என்பது இகழ்தல். எப்பொழுதுமே ஆசான் நாமத்தை சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

**குடையாமல் ஊழி இருக்கலு மாமே** – துன்பமில்லாமல் பல கோடி ஆண்டுகள் இருக்கலாம். இந்த அறிவை **போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தி** தர வேண்டும். இதற்குரிய சிறப்பறிவை ஆசான்தான் தர வேண்டும். இந்த அறிவை தந்த ஆசான், தசநாதத்தைக் கேட்க அருள் செய்வார்.

மனிதனுக்குள்ளே அற்புத சக்தி இருக்கிறது. இடகலையும் பிங்கலையும் ஒடுங்கிய உடனே ஓங்கார ரீங்காரம் கேட்கும், உள்ளே தசநாதம் கேட்கும். இந்த கருத்துகளெல்லாம் அனுபவத்தால் வருபவை. நீங்கள் கேட்க வேண்டுமென்பதற்காகத்தான் விளக்கமாக சொல்லிக் கொண்டிருக்கிறோம். என்னைச் சார்ந்து, என்னுடைய இடகலையையும் பிங்கலையையும் ரேசித்து தலைவன் உள்ளே தங்கியிருப்பதாலும், என்னுள் மும்மலம் வென்ற முதல்வன் தங்கியிருப்பதால்தான் இந்தக் கருத்துகளை உங்களுக்கு சொல்லுகிறேன்.

நாங்கள் உள்ளே தசநாதத்தை கேட்கிறோம் என்றால், அதை நான் கேட்கவில்லை. உள்ளே தங்கியிருக்கின்ற ஆசான் கேட்கிறார். வருங்காலம் ஞானசித்தர் காலம் என்பதாலே இந்த தத்துவம் எல்லா இடங்களிலும் பரவ வேண்டும். வருங்காலம் ஞானசித்தர் காலம் என்பதால் எல்லா இடங்களிலும்

யோகக்கருத்து பரவியிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட உண்மைப் பொருளை உங்களுக்கு சொல்வதால் எங்களை காரண குரு என்பார்கள்.

**கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக**
**உள்ள பொருளுடல் ஆவி யுடன்ஈக**
**எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று**
**தெள்ளி யறியச் சிவபதந் தானே.**

**– திருமந்திரம் – பக்குவன் – கவி எண் 1693.**

உண்மைப் பொருளறிந்த ஆசான் அமைவது அவரவர் நல்வினைப்பயன்.

குண்டலினி சக்தியை அறிந்து கொண்டேன் என்பான். உனக்கு மும்மலம் அற்றுவிட்டதா, ஆசை அற்றுவிட்டதா என்று அவனிடம் கேட்டால் அது எனக்கு தெரியாது என்பான். இவர்களை காரிய குரு என்று சொல்லுவார்கள்.

**கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ள** வேண்டும். அந்த குரு யாரென்று கேட்டான்? ஞானபண்டிதனாகிய ஆசான் சுப்பிரமணியர், மாபெரும் யோகி ஆசான் அகத்தீசர், மாபெரும் யோகி பட்டினத்தார், மாபெரும் யோகி புஜண்டமகரிஷி, மாபெரும் யோகி திருமூலதேவர், மாபெரும் யோகி சுந்தரானந்தர், மாபெரும் யோகி போகமகாரிஷி, மாபெரும் யோகி திருநாவுக்கரசர், மாபெரும் யோகி சுந்தரர், மாபெரும் யோகி மாணிக்கவாசகர், மாபெரும் யோகி திருஞானசம்பந்தர் இவர்களெல்லாம் மிக உயர்ந்த ஞானிகள். இவர்களே உண்மையான குரு.

மாணிக்கவாசகா என்றால் அஞ்சேல் மகனே! என்று சொல்லக்கூடிய ஆற்றல் கொண்ட பரப்பிரம்மம் ஆவார். “ஐயனே! நான் பாவிதான் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் மாணிக்கவாசகா” என்று ஒரு முறை சொன்னாலே போதும்.

ஆபத்து வருகின்ற இக்கட்டான நேரத்திலே, ஆசான் திருமூலதேவரை நினைத்தால் அப்படியே நம்மை தாங்கி பிடித்து ஆபத்திலிருந்து காப்பாற்றுவார். எங்கிருந்து அழைத்தாலும் அஞ்சேல் மகனே என்று அருள் செய்கின்ற ஆற்றல் ஞானிகளுக்கு உண்டு.

விமானம் ஆபத்திற்கு உள்ளானபோது, எல்லோரும் கடவுளை வேண்டிக் கொள்ளுங்கள் என்கிறார்கள். அந்த நேரத்தில் மாணிக்கவாசகா என்று அழைத்தால், அந்த விமான விபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுவார். அப்பேர்ப்பட்ட ஆசானை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பெருமைமிக்க ஞானிகளைத்தான் நாம் குருவாக கொள்ள வேண்டுமென்பதை ஆசான் திருமூலதேவர் **கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக** என்று கூறுகிறார்.

**எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று** – எப்பொழுதும் இடைவிடாது, ஆசான் நாமத்தை சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

**சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை**
**சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி**
**வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையாற்**
**புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே.**

**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 141.**

**சந்திப்பது நந்தி தன் திருத்தாளிணை** – தினமும் ஆசான் நாமத்தை சொல்லி, ஆசானை தொடர்பு கொள்ள வேண்டும். உண்மைப் பொருளறிந்த ஆசானையே குருவாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நான் இதுவரை பொருளாதாரத்தை மையமாக கொண்டவரைத்தான் சந்தித்திருக்கிறேன். உண்மைப் பொருள் அறிந்த ஆசான் இல்லையா? எனக்கு சுட்டிக் காட்ட வேண்டுமென்று மகான் திருமூலதேவரை வணங்கினால், உண்மைப் பொருளறிந்த ஆசானை மகான் திருமூலதேவர் சுட்டிக்காட்டுவார்.

இவன் உண்மையிலேயே பூஜை செய்திருந்தால், நல்வினை இருந்திருந்தால் உண்மைப் பொருளறிந்த ஆசான் கிடைத்திருப்பார். இல்லையென்றால் ஆசான் சுப்பிரமணியர், ஆசான் அகத்தியர், மகான் திருமூலதேவர், மகான் பட்டினத்தார், மகான் போகமகாரிஷி போன்ற ஞானிகளை வணங்கி உண்மைப் பொருளறிந்த ஆசான் எனக்கு வேண்டும், அருள் செய்யுங்கள் என்று கேட்டால், தக்க ஆசானை சுட்டிக் காட்டுவார்கள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற நான்கு படிக்கட்டுகள்தான் ஞானத்திற்கு அடிப்படையாக இருக்கிறது. இந்த நான்கு படிக்கட்டுக்களைப் பற்றி அனைத்து நூல்களும் பேசும். நான்கு படிக்கட்டுகளில் அடங்கிய கருத்துகளை நாங்கள் சொல்லிக் கொண்டு வருகிறோம். தொடர்ந்து ஆராய்ந்து பார்க்கும்போது, பக்தியால் ஏற்பட்ட அறிவு, அதனால் ஏற்பட்ட யோகம், அதனால் ஏற்பட்ட ஞானம் என்பதைப் பற்றிதான் பேசிக்கொண்டிருக்கிறோம்.

நாங்கள் சொல்லிய கருத்துகள் அனைத்தும் எங்களுடைய ஆசான் அகத்தீசர் கட்டளைப்படி சொல்லியதாகும். இங்குள்ள அன்பர்கள் எந்தளவிற்கு ஞானத்தைப் பற்றி அறிந்திருக்கிறார்கள் என்பது எங்களுக்கு தெரியாது. எனது ஆசான் எனக்கு என்னென்ன சொல்லிக் கொடுத்தாரோ, அத்தனையும் நான் உங்களுக்கு சொல்லியிருக்கிறேன்.

மாபெரும் சக்தி வாய்ந்த மகான்கள் இவ்வுலகில் இருக்கிறார்கள். தினமும் அவர்களை உள்ளம் உருகி பூசிப்பார்கள். பூசையில் அமரும்போதே கண்ணீர்

பெருக்கெடுக்கும். அப்படியெல்லாம் உருகி பூசை செய்பவர்கள் இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். முன் செய்த புண்ணியத்தால்தான் உள்ளம் உருகி கண்ணீர் பெருக்கெடுத்து பூசை செய்கிறார்கள். அதுபோன்று உள்ளம் உருக பூசிப்பது சின்ன விஷயமல்ல.

இறைவனை எண்ணியபோதே உள்ளம் உருகி கண் கலங்கி கண்ணீர் வந்தால், நிச்சயமாக அவன் ஞானத்தை அடையப் போகிறான் என்று அர்த்தம். இப்படியெல்லாம் உள்ளம் உருக பூஜை செய்து தன்னுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வேண்டும், ஞானவாழ்வு பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

கடவுளை அடைய வேண்டுமென்று தினமும் பூஜை செய்ய வேண்டும். ஆனாலும் மனம் ஒருமைப்படாது. முன் செய்த பாவத்தாலும், பரிபக்குவம் இல்லாத காரணத்தினால்தான் மனம் ஒருமைப்பட்டு உள்ளம் உருகவில்லை. அனல் பட்ட மெழுகைப் போல் உள்ளம் உருக பூஜை செய்ய ஆசைப்பட வேண்டுமென்று ஆசானை கேட்க வேண்டும்.

சில ஆன்மீக அன்பர்கள் ஆசானை பூஜிக்கும்போது, உள்ளம் கசிந்துருகி கண்ணீர் வரும். அப்படிப்பட்ட அன்பர்களை பார்த்திருக்கிறோம்.

அது வேண்டும் இது வேண்டுமென்று கேட்பதைவிட தினமும் உங்களுடைய பாதத்தைப் பற்றி பூஜை செய்தாலே போதும். இப்படி கேட்டு வந்தால் சகலமும் சித்திக்கும். இப்படி கேட்பதே சாலச்சிறந்தது. இது எங்களது அனுபவம்.

உங்கள் பாதத்தைப் பற்றி பூஜிப்பதே ஒரு பெரிய வரப்பிரசாதமாக எண்ணுகிறேன். இந்த உலகத்தில் வேறு எதுவுமே எனக்கு வேண்டாம். எனக்கு ஞானவாழ்வு ஒன்று மட்டும் போதும் என்று ஆசானிடம் நாங்கள் கேட்டோம்.

தினமும் ஆசான் திருவடியை, உள்ளம் உருக பூஜித்தாலே சகலமும் சித்திக்கும். அதுவே எனக்கு போதும். ஏனென்றால் உங்கள் பாதத்தைப் பற்றி பூஜிப்பதற்கு தகுதி எனக்கு இல்லை. நீங்களோ மாபெரும் மேரு, பிரம்மாண்டமான ஒளிச்சுடர். உங்களது தோற்றமே ஆயிரங்கோடி சூரியப்பிரகாசத்திற்கு ஒப்பானது. அப்பேர்ப்பட்ட மாமேருவை பூஜை செய்வதற்கு எனக்கு தகுதி இல்லை. தினமும் உங்களது பாதத்தைப் பற்றி பூஜை செய்ய மட்டும் அருள் செய்தால் போதுமென்று கேட்டதால்தான் எங்களுக்கு இந்த வாய்ப்பை தந்தார்கள். இந்த ஒரு வேண்டுகோள் போதும். வேறு ஒன்றும் தேவையில்லை.

திருவாசகம் ஓதிய ஆசான் மாணிக்கவாசகரை தினமும் உள்ளம் உருக பூஜித்தால் பயனுள்ளதாக இருக்கும்.

ஆசான் மாணிக்கவாசகரை பூஜை செய்தால், பத்து ஆண்டுகளில் சித்தி பெறலாம். நூல்களை படித்து அறிந்து கொள்வதால் ஆன்மாவிற்கு ஒன்றும் லாபமில்லை. இதை நாங்கள் சொல்லவில்லை. ஆசான் திருமூலதேவர் சொல்கிறார்.

**சுத்தச் சிவனுரை தானதில் தோயாமல்**
**முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூலம்**
**அத்தகை யான்மா அரனை அடைந்தற்றாற்**
**சுத்தச் சிவமாவ ரேசுத்த சைவரே.**

**– திருமந்திரம் – கடுஞ்சுத்த சைவம் – கவி எண் 1440.**

ஞானிகள் அருளிய நூல்களை படித்து கருத்துகளை அறிந்து கொள்கிறேன் என்று காலத்தை வீணாக்காதே. அதற்காக படிக்கக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. இதை சொன்னவரும் அவரே, சொல்லுகின்றவரும் அவரே.

ஆசான் மாணிக்கவாசகர் கடைப்பிடித்த அதே தவத்தைதான் மகான் திருமூலதேவரும் கடைப்பிடித்தார். மகான் திருமூலதேவர் கடைப்பிடித்ததைதான் ஆசான் மாணிக்கவாசகரும் கடைப்பிடித்தார். இவர்களெல்லாம் உடற்கூறு தத்துவத்தை அணுஅணுவாய் ஆராய்ந்து அறிந்த மக்கள். அவரவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும், அவர்கள் அடைந்த பேரின்பத்தைப் பற்றியும் ஏட்டில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

**சுத்தச் சிவனுரை தானதில் தோயாமல் –** தோய்தல் என்றால் கலத்தல். நூல்களைப் படித்து அதில் கலந்து விடாதே என்கிறார். சிவ தத்துவத்தை, சிவன் கிருபையை, சிவன் பெருமையை பேசுவது திருவாசகம். அதை சார்ந்து விடாதே என்கிறார். இப்படி சொல்வதால் அவர் நாத்திகவாதி அல்ல.

**முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூலம் –** நீ முக்தி நிலை என்கிற மோட்ச வாழ்வை அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டால், ஆசான் மாணிக்கவாசகர் பாதத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும். இதற்கு இதுதான் பதப்பொருள்.

திருவாசகம் ஓதிய மகான் மாணிக்கவாசகன் பாதத்தை பற்றுவதுதான் முக்தி பெறுவதற்கு எளிய வழி. ஆசான் மாணிக்கவாசகர் பாதம்தான் முக்திக்கு வித்து ஆகும். முத்தர் என்று சொல்லப்பட்ட மாபெரும் யோகியின் பாதத்தை நீ பற்றிக் கொள்ள வேண்டும். முக்திக்கு வித்து அதுதான் என்கிறார்.

**அத்தகை யான்மா அரனை அடைந்தற்றால் –** மாஅரன் என்றால் உயர்ந்த அரன் என்பதாகும். ஆசான் மாணிக்கவாசகரை மாஈசனாகவும் தலைவனாகவும் பார்க்க வேண்டும். அவர் பிறவிப்பிணிக்கு மருந்தாக இருக்கக் கூடியவர்.

**அத்தகை யான்மா அரனை அடைந்தற்றாற் சுத்தச் சிவமாவ ரேசுத்த சைவரே** – ஞானிகளின் நூல்களை படிப்பதில் கவனம் செலுத்துவதைவிட, ஆசானை பூஜை செய்யுங்கள். நூல்களை படிக்கக் கூடாதா என்றால், சிறிது நேரம் படிக்கலாம். நூல்களை படிப்பதிலேயே காலத்தை முழுதாக செலவு செய்யாதீர்கள். மனம் தட்டுத்தடுமாறும்போது நூலைப் படிக்க வேண்டும். அந்த நூலறிவு மனதிற்கு ஆறுதலாக இருக்கும். நூலைப் படிக்கலாம், ஆனால் அதிலேயே கவனம் செலுத்தி காலத்தை வீணாக்கக் கூடாது.

**திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்**
**திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்**
**திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்**
**திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.**

**– திருமந்திரம் – திருவடிப்பேறு – கவி எண் 1598.**

**முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூலம்** என்று அங்கே சொல்கிறார். ஆனால் இங்கே **திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்** என்று சொல்கிறார். ஆசானுடைய பாதம்தான் முக்திக்கு வித்து என்கிறார். அதே கருத்தைதான் **திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்** என்கிறார்.

ஆசானுடைய பாதத்தை திரு என்ற அடைமொழியுடன் சொல்லுகிறார். முக்திக்கு வித்தாகக் கூடிய திருவடி. அது நம்மை சிவமாக்குவிக்கும் என்கிறார். உன்னை உயர்த்தும், சிவத்தன்மைக்கு உயர்த்தும், சிவபதவியைத் தரும்.

ஞானிகள் அனைவரும் ஒருவர் திருவடியை ஒருவர் பற்றி வாழையடி வாழையாக வந்திருக்கிறார்கள். ஆசான் சுப்பிரமணியரின் ஆசியால்தான் மகான் அகத்தீசர் ஞானத்தை பெற்றார். சுப்பிரமணியம் என்று சொல்லப்பட்ட மாபெரும் தலைவன் பாதத்தை பற்றிதான் மகான் அகத்தீசர் ஞானவாழ்வைப் பெற்றார். இப்படியாக ஒவ்வொரு மகானும் வாழையடிவாழையாக வழிவழி வந்தவர்களின் திருவடியைப் பற்றி குருபாரம்பரியமாக வந்திருக்கிறார்கள்.

தான் அடைந்த பேரின்பத்தை, உண்மையை மற்றவர்களும் அடைய வேண்டுமென்று விரும்பினார்.

**திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்**
**திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்**
**திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்**
**திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.**

**– திருமந்திரம் – திருவடிப்பேறு – கவி எண் 1598.**

திருவடி ஞானம் சிவமாக உன்னை உயர்த்தும். சாட்சாத் பரப்பிரம்ம சொரூபியாக வாழலாம்.

**திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்** – நீங்கள் அவலோகத்தில் இருக்கின்றீர்கள். இந்த உலகத்திலேயே நீங்கள் மேலான வாழ்வை வாழலாம். சிவலோகம் என்றால் துன்பமில்லாத உலகம்.

**திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்**
**திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.**

இந்த உடம்பு மும்மலத்தால் ஆனது. மும்மலமான உடம்பில் சிறைப்பட்ட ஆன்மாவை பிரித்தெடுக்க வேண்டும்.

பசி இயற்கையா? செயற்கையா? என்றால் இயற்கைதான். நீ உண்ணுகின்ற உணவுப் பொருட்கள் அத்தனையும் இயற்கையே. மூச்சுக்காற்று அசைகின்ற காரணத்தினாலே, கருவி கரணங்கள் அசையும். அதன் காரணமாக பிராணன் இயங்கும். அதனால் பசி எடுக்கும். இது எல்லோருக்கும் தெரியும்.

இந்த அசைவு இயற்கையா? செயற்கையா? அதுவும் இயற்கையே. உண்ணுகின்ற உணவும் இயற்கை. பசிக்கு உணவு சாப்பிடுவான். உள் கருவி கரணங்கள் உண்ட உணவில் உள்ள சத்து அசத்தை பிரிக்கும். அந்த சத்து எழுபத்திரண்டாயிரம் நாடிநரம்புகளை முறுக்கேற்றி உடலை திடமாக்கும், சக்தியை உண்டாக்கும்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற அந்தக்கரணங்களை அந்த சக்தி தட்டி எழுப்பும். அதன் காரணமாக மெய், வாய், கண், மூக்கு, செவி என்று சொல்லப்பட்ட பொறிபுலன்களை இயக்கும். பொறி ஐந்து, புலன் ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆகிய பதினான்கு கருவிகரணங்களை அந்த சக்தி இயங்கச் செய்யும். இந்த இயக்கம் நாம் உண்ட உணவினால் நடக்கிறது. இந்த உடம்பில் உள்ள அசத்தாகிய கழிவுப்பொருளை அபான வாயு வெளியே தள்ளும். இப்படிப்பட்ட உடம்பிற்குள்ளேதான் ஆன்மா இருக்கிறது.

மும்மலத்திற்கு காரணம் பசி. பசிக்கு உணவு தராவிட்டால் இறந்துவிடுவான். பசிக்கு உணவு கொடுத்தால் மும்மலம் உண்டாகும். மும்மலத்தால் உடம்பு அசுத்தப்படுகிறது.

யோகி சிறைமலத்தை மீட்கிறான். அப்பொழுது இடகலையையும், பிங்கலையையும் ரேசித்து சுழிமுனையில் ஒடுக்கிவிட்டால் ஆண்டு பன்னிரண்டுக்கு பிறகு அமிழ்தபானம் சிந்தும். இந்த அமிழ்தபானம் பசியை அடக்கிவிடும்.

**கொல்லன் உலைபோலக் கொதிக்குதடி யென்வயிறு**
**நில்லென்று சொன்னால் நிலைநிறுத்த கூடுதில்லை**
**நில்லென்று சொல்லியல்லோ நிலைநிறுத்த வல்லார்க்குக்**
**கொல்லென்று வந்தநமன் என்கண்ணம்மா குடியோடிப் போகானோ.**

**– மகான் அழுகணிசித்தர் பாடல் – கவி எண் 7.**

அமிழ்தபானத்தை உண்ணுகின்றவனுக்கு பசி இருக்காது. பசியில்லையென்றால் உணவு சாப்பிட வேண்டிய அவசியமில்லை. உணவு சாப்பிடாவிட்டால் மும்மலமற்றுப் போகும். அப்பொழுது ஆன்மா மலமற்ற தன்மையை அடையும். பசியை ஒழித்தாலன்றி மும்மலம் அற்றுப் போகாது.

பசிக்கு உணவு தந்தால் நிச்சயமாக காமம் வரும், அசுத்தம் உண்டாகும். இப்படி ஒரு சிக்கலான பிரச்சனை இருக்கிறது. உணவை ஒழித்தால் இறந்துவிடுவான்.

உணவு கொடுத்தால் காமம் வரும். அப்பொழுது உடலில் மாசு இருக்கும். ஆகவே ஒன்று இருக்கும்பொழுதே ஒன்றை பிடிக்க வேண்டும்.

**திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்** – ஞானிகள் மீது அன்பு செலுத்தினால் உனக்கு இந்த அறிவு வரும். உடம்பு எப்படி மாசுபடுகிறது என்ற அறிவு வரும். இந்த மாசு நாமாக விரும்பியதா அல்லது திணிக்கப்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தால், நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இப்படித்தான் இருக்கும். அது இயல்பு.

பசி உனக்கு இருக்கும், நீ சாப்பிடத்தான் வேண்டும். அப்படி சாப்பிட்டால் உடம்பு சத்து அசத்தை பிரிக்கும். ஆன்மா மும்மலத்தில் சிறைப்பட்டு கிடக்கும். பசி அற்றால் ஆன்மாவின் மாசு நீங்கும். அமிழ்தபானம் சாப்பிடுகின்ற மக்களுக்குத்தான் இந்த வாய்ப்பு கிடைக்கும்.

**உச்சிக்குக் கீழடியோ ஊசிமுனை வாசலுக்குள்**
**மச்சுக்கு மேலேறி வானுதிரத் தானெடுத்துக்**
**கச்சை வடம்புரியக் காயலூர்ப் பாதையிலே**
**வச்சு மறந்தல்லோ என்கண்ணம்மா வகைமோச மானேண்டி.**

**– மகான் அழுகணிசித்தர் பாடல் – கவி எண் 14.**

உன்னை வஞ்சிக்கின்ற சுக்கிலத்தை மேல்நோக்கி செலுத்த வேண்டும். அப்படி மேல் நோக்கினால்தான் ஊசி முனை வாசலுக்குள்ளே அமிழ்தபானம் சிந்தும். உன்னுடைய உடம்பே உனக்கு அமிழ்தம். உன்னுடைய உடம்பே காயகல்பம். ஆகவே அசுத்தத்தை நீக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்**
**திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.**

உனக்கு ஞானத்தையும், சித்தியையும், முக்தியையும் தரக்கூடியது ஆசான் திருவடிதான்.

**திருவடி யேசிவ மாவது தேரில்**
**திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்**
**திருவடி யேசெல் கதியது செப்பில்**
**திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.**

**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 138.**

**திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்** என்று அங்கே சொல்கிறார். ஆனால் இங்கே **திருவடியே சிவமாவது தேரில்** என்கிறார். ஆராய்ந்து பார்க்கும் காலத்தில் ஞானிகளுடைய திருவடிதான் ஞானம் தரும் என்கிறார்.

ஆகவே நூல்களை படித்து அறிவதைவிட, நூல்களை அருளிய ஞானிகளின் திருவடிகளைப் பற்றி பூஜித்து ஆசியைப் பெற்றால் விரைவில் ஞானியாகலாம். அதற்காக நூலறிவு வேண்டாமென்று சொல்லவில்லை, மனசோர்வு வரும்போது நூல்களை சிறிது நேரம் படிக்கலாம். நமது நோக்கம் ஞானிகள் திருவடிகளைப் பற்றி பூஜித்து அவர்களின் ஆசியைப் பெறுவதாக இருக்க வேண்டும். ஞானிகள் திருவடி மட்டுமே ஞானத்தை தரும் என்பதை நீங்கள் எல்லோரும் உணர்ந்து ஞானிகள் திருவடியைப் பற்றி பூஜை செய்யுமாறு கேட்டுக் கொண்டு முடிக்கிறேன் வணக்கம்.

–சுபம்–

# முருகன் திருவடி வாழ்க

## துறையூர் ஓங்காரக்குடிலிற்கு செல்ல வழித்தடம்

1. மதுரை (200கிமீ), திருச்சி, மார்க்கம் (45கிமீ) – திருச்சி மத்தியப்பேருந்து நிலையம் – சத்திரம் பேருந்து நிலையம் – டோல்கேட் – மண்ணச்சநல்லூர் – புலிவலம் – துறையூர். (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்)
2. சென்னை மார்க்கம் (330கிமீ) – சென்னை கோயம்பேடு – விழுப்புரம் – பெரம்பலூர் – துறையூர். (பஸ்டாண்டு).
3. கரூர் மார்க்கம் (70கிமீ) – கரூர் பஸ்டாண்டு – குளித்தலை – முசிறி – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).
4. சேலம் மார்க்கம் (110கிமீ) – சேலம் பஸ்டாண்டு – வாழப்பாடி – மல்லியக்கரை – தம்மம்பட்டி – துறையூர் (பஸ்டாண்டு).
5. ஈரோடு மார்க்கம் (110கிமீ) – திருச்செங்கோடு – நாமக்கல் – தா.பேட்டை – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).

துறையூர் ஓங்காரக்குடில் உணவு நோய் தீர்க்கும் மருந்தாகும்

# ஓங்காரக்குடிலின் அமுதின் பெருமை குறித்த மகான் சுப்பிரமணியர் ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

20.03.2020

1. யுகமெங்கும் வறுமை நீங்கி
உயிர்கள் அனைத்தும் வளம்பெற
செகமதனில் அவதாரம் எடுத்த
சிவராஜயோகி அரங்கன் குடிலின்

2. குடிலின் அமுதின் பெருமை குறித்து
கூறிடுவேன் சுப்பிரமணியர் யானும் ஆசிதனை
குடிலும் உலகமாற்றம் செய்யவே
குறையிலா தரும சேவையாக பசிபிணி

3. பசிபிணி விரட்டும் அருளமுதை
பரோபகாரமுடன் ஆறுமுகனார் யானும்
ஆசிபட உலகமக்களை நோக்கி
அருளமுதாக வழங்கி வர

4. வருகவே குடிலின் அருளமுது
வருவோர் வினை தீர்க்கும் அருமருந்து
பெருமைமிக்க மகா சக்திகளும்
பிரசாதமாக அமுதில் இறங்கி அருள

5. அருளமுது உண்டு வருபவர்கள்
ஆற்றல் ஆயுள் கீர்த்தியோடு
தரும சிந்தை மாற்றம் உண்டாகி
தயவுமிக்க மக்களாகி சிறப்பர்

6. சிறப்பான சக்திபட முருகப்பெருமான் யானும்
சூட்சும சக்தி வழங்கி அமுதை
அறமாக மக்களிடை வழங்கியருள
அணுகி உண்பவர்க்கு உயர் ஞானமும்

7. ஞானமுடன் அழியாமை என்கிற
நல்சக்தியாம் ஜீவமுக்திக்கான
ஞானமும் கூடி பெரும் பேறடைவர்
நல்கி குடில் அமுது உண்டுவர

8. வருகவே உலகப் பேரிடரெனும்
வல்லமையான நச்சுக்கிருமி தாக்குதல்
வருகின்ற பருவகால விசசுரம் பிணி
வல்வினை ஊழ்வினை துன்பம் அனைத்தும் விலகி

9. விலகியே தேகமனோ பலமுடன்
வேலவன் என் துணை கூடியே
காலனை வெல்லும் சக்தி பெருக்கம்
கண்டுமே குடிலின் அருளமுது உண்போர் சிறப்பர்
பாதுகாப்பு பெறுவர் ஆசி நூல் முற்றே.

–சுபம்–

துறையூர் ஓங்காரக்குடில் உணவின் பெருமைகள் குறித்த மகான் சுப்பிரமணியர் அருளிய ஆசி நூலின் சாரம் :

இந்த உலகினில் உள்ள வறுமையை போக்கி, உலகமக்கள் அனைவரும் வளமான வாழ்வைப் பெற்று வாழ, அவதாரம் எடுத்திட்ட சிவராஜயோகி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஓங்காரக்குடிலினில் அரங்கமகான் அளிக்கும் அருளமுதாகிய உணவின் பெருமைகளை சுப்பிரமணியர் யானும் ஆசி நூல் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியர்.

உலக மாற்றமானது தர்மத்தின் வழியில்தான் நடக்கும். அந்த வகையில் உலகமாற்றம் செய்திட பசிப்பிணி விரட்டும் சேவையாக ஜீவதயவுடன் ஓங்காரக்குடிலினில் முருகப்பெருமான் யானே அருளமுதாக வழங்கி வருகின்றேன். ஆகவே உலக மக்களே ஓங்காரக்குடிலினை நாடி வந்து, குடில் உணவினை பக்தியுடன் உண்டால், அவர்களது வினைகளெல்லாம் நீங்கிடும். உலகமகா சக்திகளெல்லாம் குடில் உணவிற்கு அருளாசிகள் வழங்கி நிற்க, குடில் உணவு அருள் பிரசாதமாகும், அப்படிப்பட்ட உயர்ந்த

குடில் உணவை உண்டு வருகின்றவர்கள், நீடிய ஆயுளை புகழுடன் பெறுவார்கள். அவர்களுக்கு தர்ம சிந்தனை உண்டாகும், தயவுடைய மக்களாய் ஆகிடுவார்கள்.

சிறப்புமிக்க சக்திகளை முருகப்பெருமான் யானும் குடில் உணவில் வழங்கி, உணவினை மக்களுக்கு வழங்கி அருள் செய்கின்றேன். ஆதலினாலே உலகமக்களே ஓங்காரக்குடிலினை நாடிச் சென்று உணவு உண்பவர்களுக்கு உயர் ஞானம் உண்டாகும். அழிவிலாமை எனும் மரணமற்ற நிலையை அடைவதற்கான ஞானத்தினையும் அவர்கள் பெற்று பெரும் பேற்றினை அடைவார்கள். குடில் உணவினை உண்டு வருபவர்களுக்கு நச்சுக்கிருமிகளின் தாக்குதல், பருவ காலங்களில் வருகின்ற விஷசுரங்கள் எல்லாம் வராமல் காக்கப்படுவர். அவர்களது முன் ஜென்ம பாவங்களாகிய ஊழ்வினைத் துன்பமும் விலகி தேகபலமும், மனோபலமும் முருகப்பெருமான் எனது துணையையும் பெற்று எமனையும் வெல்லும் அளவிற்கு ஆற்றல் பெருகி சிறப்படைவார்கள் எனக் கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–

ஞானிகள் திருஉருவப்படங்கள்,
ஆசான் அருளிய நூல்கள், தினசரி,
மாத நாட்காட்டிகள்,
ஆசான் அருளுரைகள் அடங்கிய ஒலி ஒளி குறுந்தகடுகள் CD
மற்றும் ஞானத்திருவடி நூல்
கிடைக்கப் பெறாதவர்களும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்,**
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில், துறையூர் – 621 010.
✆ 04327–255184,
செல்: 90950 33311
மின்னஞ்சல் : kudilbooks@gmail.com

அகத்தியர் துணை


மகான் அகத்தியர்


குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை,**

**துறையூர்.**

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | கோபாலகிருஷ்ணன், மணப்பாறை | 80121 63639 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## சித்ரா பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, சித்திரை மாதம் 24ஆம் தேதி,**
**07.05.2020 - வியாழக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## வைகாசி பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, வைகாசி மாதம் 23ஆம் தேதி,**
**05.06.2020 - வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

# ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 75 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு<br>ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |


**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை
DD - வரைவோலை
MO - பணவிடை

....................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at “Thuraiyur” or “Tiruchirapalli”**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :

96882 78666, 91503 75562. trustkudil@gmail.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

# தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அமுத மொழிகள்...

1. முருகா என்றால் மும்மலக் குற்றங்கள் நீங்கும்.
2. முருகா என்றால் செல்வநிலை பெருகும்.
3. முருகா என்றால் நல்லறிவைப் பெறலாம்.
4. முருகா என்றால் வறுமை, நோய்நொடிகள் நீங்கும்.
5. முருகா என்றால் ஞானவாழ்வு கைகூடும்.
6. முருகா என்றால் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்.

## உயிர் இரக்கமே இறைவழிபாடு....


**சென்னையில் அப்பார்ட்மெண்ட் மற்றும் தனி வீடு, வீட்டு மனைகள் வாங்க விற்க அணுகவும்.**

குருவருள் வேண்டி

**ம. அருள் பிரகாசம்**

**Srilekha Homes**
Gift to your dream

Plot No: 41, 2nd Floor, V.G.P. BABU NAGAR,
MEDAVAKKAM, CHENNAI - 100

Cell : 98841 27766 , 94449 88877

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. —குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54—தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

## "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

19/30, பிள்ளையார் கோவில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828.

✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

வான் பெறற்கு அரியவகையெலாம் விரைந்து
நான் பெறவளித்த நாத மந்திரமே
கற்பம் பலபல கழியினும் அழியாப்
பொற்புற அளித்த புனித மந்திரமே
அகரமும் உகரமும் அழியாச் சிகரமும்
வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே
ஐந்தென எட்டென ஆறென நான்கென
முந்துறு மறைமுறை மொழியு மந்திரமே
வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும்
ஓதநின்று உலவாது ஓங்கு மந்திரமே

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.
Builders & Estates
Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

*கவனகரின்*

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

# கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

# இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கௌத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 5.00 | கிராம அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,

113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,

வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ____________________

முகவரி : ____________________

____________________

ஊர் : ____________________ பின்கோடு ____________

வட்டம் : ____________________ மாவட்டம் ____________

தொலைபேசி : ____________ (கைபேசி) ____________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்